மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 9
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**ஜுலை 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विलेज मिनिस्ट्री ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 ஜுலை**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்.

உபாகமம் 7:15.




கர்த்தருடைய கிருபையினால் திருச்சி – பொன்மலைப்பட்டியில் கட்டப்பட்டுள்ள ஜெப வீட்டை 09.06.2009-ல் **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** தேவனுடைய நாம மகிமைக் கென்று திறந்து வைத்தார்கள். மற்றும் 5 ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்தார்கள்.

**Thanks:**
***Yishun Evangelical Church***

# TAMIL VILLAGE GOSPEL MISSION

## TVGM DIRECTOR Letter Dated: 16.06. 2009



**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கர்த்தருடைய கிருபையினால் 2009 ஜுன் 9 - 12 ( 4 நாட்களில் ) 6 ஜெபவீடுகளை தேவனுடைய மகிமைக்கென்று **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** ஐயா மூலம் பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

திருச்சி மாவட்டத்தில் ஆலயமில்லாத கிராமத்தில் தங்கியிருந்து ஊழியம் செய்து ஞாயிறு ஆராதனை வாடகை வீட்டில் நடத்தி வருபவர்கள் ( 15'X 30') ஜெபவீடு கட்டும் பணியில் தங்கள் பங்காக பாதித் தொகை செலவளிக்க முன்வரும்போது, பாதித் தொகையை **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** அவர்கள் தங்கள் சபை மக்கள் மூலம் கொடுப்பதற்கு முன் வந்துள்ளார்கள். 2009 ம் ஆண்டு இன்னும் 6 ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்ய வாஞ்சிக்கிறார்கள். ஜெபியுங்கள்.

அநேக கிராம ஊழியர்கள் ஜெபவீடு கட்டுவதற்கு சிறு பங்கு கூட கொடுக்க முடியாமல் தவிக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய உண்மை ஊழியங்களை பார்வையிடும் போது, எங்களுக்கு முழுமையாக கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை. கர்த்தர் தமக்குச் சித்தமானவர்களை எழுப்ப ஜெபியுங்கள்.

Leadership Training Centre க்காக தொடர்ந்து ஜெபித்து வாருங்கள். குறித்த காலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும். ( ஆப.2:3 ). **அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்** என்று இயேசு கூறியபடி ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மிக மிகக் குறைவாக காணப்படுகிறார்கள். ஆதலால், **எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்.

**க**ர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு தேவ ஊழியரே, விசுவாசியே!

**''கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்''.** என வாழ்த்துகிறேன்.

**"நிழலின் அருமை வெயிலில் போனால்தான் தெரியும்"** என ஒரு பழமொழி கூறுவார்கள்.

நோய், வியாதியினால் வாடுபவர்களுக்குத்தான் சுகத்தின் அருமை தெரியும். இதைச் சாப்பிடக் கூடாது, அதைச் சாப்பிடக்கூடாது, பிரயாணம் போகக்கூடாது என்று சொல்லும் பொழுதெல்லாம் வேதனை.

**வியாதி** என்று சொல்லும் பொழுது துன்மார்க்கனுக்கு தான் வரும் என்று நினைக்கிறோம். ஆனால் அநேக ஊழியங்களை தாங்கும் நல்ல விசுவாசிகள் கூட வியாதியினால் துன்பப்படுவதைப் பார்க்கிறோம்.

மிக முக்கியமாக, இரவும், பகலும், பரிசுத்தத்துடனும், உண்மையுடனும் ஓடி,ஓடி உழைக்கும் உன்னதமான தேவனுடைய ஊழியர்கள் வியாதியினால் படும் வேதனைக்கு அளவே இல்லை.

ஒரு சில தேவ மனிதர்கள் வியாதிக்கு மருந்து சாப்பிடுவதில்லை என்று சாட்சி கூறியதை கேட்டு மகிழ்ச்சியடைந்திருக்கிறேன்.

உதாரணமாக புதுக்கோட்டையில் AJC ஸ்தாபன தலைவர் **பாஸ்டர். கைவல்யம் டேவிட்** ஒரு நல்ல சாட்சியாகும். இவர் மருந்தே எடுப்பதில்லை என கூறுகிறார்.

சில தேவ மனிதர்கள் கர்த்தருக்காக வைராக்கியத்தோடு மருந்து எடுப்பதில்லை என்று கூறி வயோதிப காலத்தில் மிகுந்த கஷ்டத்தில் மற்றவர்களின் ஆலோசனைகளின் பெயரில் மருந்து சாப்பிட்டு, குணம் அடைந்தவரும் உண்டு. மரணம் அடைந்தவரும் உண்டு.

என்னுடைய மூத்த சகோதரன் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து 35 வருடமாக மருந்து சாப்பிட்டதில்லை. மஞ்சட்காமாலை வியாதி வந்து அவதிப்பட்டபோது கூட மருந்து எடுக்கவில்லை. ஆனால் தேவன் அற்புதமாக குணமாக்கினார்.

அதே சமயம் அவருடைய 26 வயது வாலிப மகள் (பெங்களூர் பட்டணத்தில்) ஊழியம் செய்தபோது விசுவாசத்தில் உறுதியாயிருந்து மருந்து எடுப்பதில்லை என்று கூறி, நிச்சயத்தோடு மறுமைக்குள் கடந்து சென்றார்கள்.

ஒவ்வொருவருடைய அனுபவமும், வித்தியாசமாக இருக்கிறது.
அன்பு நண்பரே!

**இன்று கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்:**

**''கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்''.**

இன்றைக்கு உலகில் விதவிதமான நோய்கள் பரவுவதை பார்க்கிறோம். சமீபகாலத்தில் தான் **சிக்கன்குனியா** வந்தது. அதற்குள் **பன்றிக் காய்ச்சல்** வந்துவிட்டது.

சாதாரண ஒரு மனிதனுக்கு காபி கொடுக்கும்போது, கேட்கிற ஒரு கேள்வி சர்க்கரை எவ்வளவு போட வேண்டும் என்பதாகும். ஏனெனில் சராசரியாக பெரும்பான்மையான குடும்பங்களில் சர்க்கரை வியாதி, கேன்சர், மாரடைப்பு, ஆஸ்துமா என்று வியாதிகள் நிறைந்து காணப்படுகிறது. நீங்கள் ஏதாவது ஒரு வியாதியினால் பீடிக்கப்பட்டு அவதிப்படுகிறீர்களா ? அல்லது பல நோய்களினால் பீடிக்கப்பட்டு நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்கிறீர்களா ?

பிள்ளையை பற்றிய கவலையா ? புருஷனைப் பற்றிய கவலையா ? பெற்றோரைப் பற்றிய கவலையா ? உடன் பிறந்தவர்களைப் பற்றிய கவலையா ? அல்லது மனைவியைப் பற்றிய கவலையா ? எதுவாகவும் இருக்கட்டுமே ?

வேதம் சொல்லுகிறது:

**“கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்”.**

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

வேதத்தில் அநேக பக்தர்களின் வியாதியைப் பற்றி வாசிக்கிறோம்.

**பழைய ஏற்பாட்டிலே,**

**1சாமு.**19:14 தாவீது வியாதியாயிருந்தார்

**1இராஜா.** 14:1 யெரோபெயாமின் குமாரன் அபியா வியாதியில் விழுந்தான்.

**2இராஜா.** 8: 7 சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் வியாதியாயிருந்தான்.

**2இராஜா.** 9:16 யோராம் வியாதியாய்க் கிடந்தான்.

**2இராஜா.** 13:14 எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்.

**தானி.** 8:27 நான் சோர்வடைந்து, சில நாள் வியாதிப்பட்டிருந்தேன்.

**புதிய ஏற்பாட்டில்,**

**லூக்கா** 7:2 நூற்றுக்கு அதிபதியாகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையாயிருந்தான்.

**யோவான்** 4:46 கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்

**யோவான்** 11:1 லாசரு என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான்.

**பிலி.** 2:27 எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டிருந்தான்.

**அப்.** 9:37 தபீத்தாள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள்.

**அப்.** 9:40 பேதுரு தவீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.

**யோவான்** 5:6 அவன் நீண்ட காலம் வியாதியாயிருந்தான்.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் படித்துப் பார்க்கும்போது, அநேக பக்தர்கள் வியாதிகளினாலே கஷ்டப்பட்டதைப் பார்க்கிறோம்.

**மத்தேயு** 4: 23. இயேசு சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்த மாக்கினார். ஆமென்.

**இந்த இயேசு இன்றும் ஜீவிக்கிறார்.** நம் சகல நோய்களையும் நீக்குவதற்கு வல்லவராயிருக் கிற தேவனையே நோக்கிப் பார்ப்போம். ஏனெனில் **நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்** என தேவன் வாக்களிக்கிறார்.

பக்தன் பாடுகிறான்:-

**சகல வியாதியையும்**
**குணமாக்க வல்லவராம்**
**யாராயிருந்தாலும்**
**பேதங்கள் இன்றியே**
**கிருபையாய் அன்பை அளித்திடவே**
**இயேசு அழைக்கிறார்**
**ஆவலாய் தம் கரங்கள் நீட்டியே**
**இயேசு அழைக்கிறார்.**

பாடுவோமா, பாடிக்கொண்டே இருப்போம். பாடும்பொழுதெல்லாம் ஒரு சுகம் உண்டாகும்.

**"கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்".**

இயேசு கிறிஸ்து சகல நோய்களையும் சொஸ்தமாக்கினது மட்டுமல்ல,

**மத்தேயு** 10:1.

**சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அதிகாரம் . . . கொடுத்தார்.**

இன்றைக்கு கர்த்தருடைய பிள்ளைகளின் சகல வியாதிகளையும் நோய்களையும் கர்த்தர் குணமாக் குகிறார். அதே நேரத்தில் இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர் களுக்கு வியாதியை குணமாக்க அதிகாரமும் கொடுக்கிறார்.

ஆதலால், நாம் சுகத்தைப் பெறுவோம். மற்றவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் சுகத்தை வாங்கிக் கொடுப்போம்.

**வியாதியஸ்தர்களை விசாரித்தல்**

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தேவன் கொடுக்கும் ஆலோசனை: சுகவீனமாக உள்ளவர்களைப் பார்த்து, விசாரித்து, ஆறுதல் கூறி, தேவைப் படும் உதவியில் நம்மால் முடிந்தவற்றை செய்ய வேண்டும்.

**இயேசு கூறுகிறார்: மத்.** 25:36.
நான் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளிலே இயேசு கூறும் வார்த்தையை கருத்தாய் கவனியுங்கள்.

நான் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்.

நாம் சுகம் பெறுவது மாத்திரமல்ல, நம் உறவினர்களையும், குடும்பத்தினரையும் போய் விசாரிப்பது மட்டுமல்ல. அரசாங்க மருத்துவ மனையிலும், தெருக்களிலும், குடிசைகளிலும், கிடக்கிற முன்னும், பின்னும் தெரியாத வியாதியஸ்தர் ஒருவரை இயேசுவின் நாமத்தினாலே போய் விசாரித்து உதவி செய்வதுமாகும். இப்படி செய்யும்போது அநேக நேரத்தில் நாம் இயேசுவையே விசாரிப்பதாக வேதம் கூறுகிறது.

**மத்.**25:40 **மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்.**

அநேக பிள்ளைகள் தங்கள் சபையின் மூலமாக **"ஆஸ்பத்திரி ஊழியம்"** செய்கிறார்கள். இவர்களுக்காக விசேஷமாக ஜெபியுங்கள்.

இவர்களுக்காக நீங்கள் ஜெபிக்க ஆரம்பிக்கும்பொழுது அல்லது வியாதியஸ்தர்களை விசாரிக்க ஆரம்பிக்கும்பொழுது தேவன் உங்கள் மேல் பிரியப்பட்டு, **"கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்".**

**மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா.6:7).**

**பரிசுத்த வேதாகமம் கூறும் ஆலோசனைகளைப் பாருங்கள்.**

***சபையின் மூப்பரை அழையுங்கள்.***

**யாக்.** 5:14. உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்.

**யாக்.**5:15 அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

**மாற்.** 16:18 விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்கள். வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.

***குற்றங்களை அறிக்கையிடுங்கள்***

**யாக்.** 5:16 நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

சில நேரங்களில் நாம் நினைப்பது என்னவெனில் வரங்கள் பெற்ற பெரிய ஊழியர் அல்லது பாஸ்டர் ஜெபித்தால் மட்டுமே குணமாகும் என்பதாகும்.

ஆனால் தேவன் மேல் விசுவாசம் வைத்திருக்கிற ஒரு படிப்பறியாத, ஏழை விசுவாசிக்கும்கூட தேவன் குணமாக்கும் வரத்தை கொடுத்திருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

விசுவாசமே முக்கியமாக உள்ளது.

உன்னைக் கொண்டு இது வரையிலும் கர்த்தர் அநேகரை குணமாக்கியுள்ளார். அநேக நேரங்களில் உங்களைக் கொண்டு தேவன் செய்த அற்புதங்கள் உங்களுக்கே தெரிவதில்லை. ஒரு வேளை உங்களுக்கு தெரிந்திருந்தாலும் அந்த பெரிய அற்புத சாட்சி TV யிலோ அல்லது பத்திரிக்கைகளிலோ வெளிவராமல் இருக்கலாம். உங்கள் சபையினர் உங்கள் குணமாக்கும் வரங்களை காணாமல் இருக்கலாம். ஆனாலும் கர்த்தர் அதைக் காண்கிறார். இயேசு கூறுகிறார்:யோவான் **1:50 "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்"** ஆமென்.

மிக முக்கியமாக நாம் அறிந்திருக்க வேண்டிய ஒரு உண்மை என்னவெனில் **ஏசா.**53:5 அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

**ஏசா.**53:4 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.

மேற்கண்ட வசனங்களை வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கும்போது நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

**1பேதுரு** 2:24 அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

இயேசுவினுடைய தழும்புகளால் குணமானேன்.

இயேசுவினுடைய தழும்புகளால் குணமானேன்.

இயேசுவினுடைய தழும்புகளால் குணமானேன்.

மீண்டும், மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள்.

***"கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்".***

# மதுரை - உசிலம்பட்டி யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

**தேதி : 18.05.2009 முதல் 22.05.2009 முடிய**

**THANKS: Potter's Hands Ministry(David Keller & Anne)**





கர்த்தருடைய கிருபையினால் கடந்த 18.05.2009 முதல் 22.05.2009 வரை **மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி யூனியனில் 100**–கிராம ஊழியம் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு பார்சல் செலவுகள் யாவையும் உசிலம்பட்டி **மாரநாதா சபை பாஸ்டர் இம்மானுவேல்** அவர்கள் பொறுப்பெடுத்து உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களி லிருந்து 51 கிராம ஊழியர்கள் வந்து கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் உசிலம்பட்டி யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்க ளையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. TVGM ஸ்தாபகர் **சகோ. P.T. கிறிஸ்டோபர், சகோதரி ஜெயசீலி கிறிஸ்டோபர்** மற்றும் TVGM காரியதரிசி **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** ஆகியோர் கலந்து கொண்டு ஜெபித்தார்கள். **பாஸ்டர் இம்மானுவேல்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.

பின்பு கிராம ஊழியர்களை 11 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக தனித்தனியே கூடி ஜெபித்தார்கள். இதன்பின்பு மாரநாதா சபையின் சார்பில் ஊழியர்களுக்கு சிறப்பு விருந்து கொடுத்தார்கள். விருந்திற்கு பிறகு கிராமங்களுக்கு கடந்து சென்று **5** நாட்கள் கிராமங்களில் தங்கி ஊழியம் செய்தார்கள். ஊழியத்தின்போது 12,190 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 10,000 சிலுவைக்கொடிகள், 20,000 கைப் பிரதிகள் இலவசமாக வழங்கப்பட்டது.

கடைசி நாள் மீண்டும் மாரநாதா சபையில் யாவரும் கூடி, ஜெபித்து கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக கூறினார்கள். மாரநாதா சபையினர் இரவு விருந்தும், இனிப்பும் வழங்கினார்கள். TVGM சார்பில் கிராம ஊழியர்களுக்கு பிரயாணப்படி வழங்கப்பட்டது.

இந்த ஊழியத்தின் மூலம் 235 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களைக் கொடுத்து தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 பாஸ்டர் ஆல்வின், சகோ. ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், தாவீது தங்கவேல்.**

நாங்கள் வில்லாணி கிராமத்தை மையமாக வைத்து அதை சுற்றியுள்ள 9 கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் புத்தகம், சிலுவைக்கொடி, கைப்பிரதிகள் இலவசமாக கொடுத்து சுவிசேஷத்தை அறிவித்தோம்.மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி கஸ்தூரி, மேரிமீனா, எஸ்தர் பேபி, ரூத்பகவதி, மரியாள்.**

நல்லம்மாபட்டி கிராமத்தில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, யாவரும் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டனர். பலருக்காக ஜெபித்தோம். மக்கள் எங்களை அன்புடன் வரவேற்று சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1115 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோதரி மணியம்மாள், மேரி செல்லாபாய், லீதியாள், தேவகிருபை, சலோமி சம்மனசு.**

எங்களுக்குக் கொடுக்கப்பட்ட 7 கிராமங்களிலும் சென்று சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். மக்கள் வாஞ்சையோடு வாங்கினார்கள். கிருஷ்ணாபுரத்தில் ஒரு வாலிபன் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கி துாள் துாளாக கிழித்துப் போட்டான். அவனை கர்த்தர் இரட்சிக்கும்படி ஜெபித்தோம். முஸ்லீம் மக்கள் வசிக்கும் தெருவிலும் கொடுத்த போது, ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 900 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோ.மாற்கு மாரியப்பன், மகாராஜன், சகோதரி கிரேஸ் பத்மா, அன்னக்கிளி.**

எங்களுக்கு கொடுத்திருந்த 9 கிராமங்களிலும் சுவிசேஷப் புத்தங்கள் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். மலைவாழ் மக்களும், நரிக்குறவர்களும் இங்கு தனித்தனியே இரு கிராமங்களில் வசிக்கிறார்கள். இவர்களுக்கு நற்செய்தியைக் கூறி ஜெபித்தோம். வாய் பேச முடியாதிருந்த ஒரு பையனுக்காகவும் ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:5 சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, ஜோதிமணி, தேவநேசம், அன்னாள்.**

நாவார்பட்டி கிராமத்தில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து வரும் போது, ஒருவர் எங்களுக்கு வேண்டாம், எங்கள் சாமிக்கும் உங்கள் சாமிக்கும் ஒத்து வராது என்றார். சில வாலிபர்கள் பைக்கில் வந்து இங்கு இயேசுவைப் பற்றி சொல்லக்கூடாது. மீறி சொன்னால் உங்களை போலீசில் பிடித்துக் கொடுப்போம். மதம் மாற்றம் செய்ய வந்த உங்களை ஜெயிலில் அடைத்து விடுவார்கள் என்று மிரட்டினார்கள். அவர்களிடம் அன்பாக பேசி அங்கிருந்து வேறு கிராமத்திற்கு சென்றோம். அந்த கிராமத்தில் ஒருவரை சந்தித்தபோது அவர் “ நான் 10 நாட்களாக இயேசுவைப் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தேன். இதற்காக என்ன செய்ய வேண்டும், எங்கு போக வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது நீங்கள் இங்கு வந்து என்னை சந்தித்தது மிகவும் சந்தோஷமாக உள்ளது” என்று கூறி

அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்று அவர் மனைவி, பிள்ளைகளுக்காக ஜெபிக்கும்படி சொன்னார். **இயேசுவே மெய்யான கடவுள்** என்பதை ஏற்றுக் கொண்டு தன்னை ஒப்புக் கொடுத்தார். மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 சகோ.சூசைமாணிக்கம், ஆரியப்பன், அந்தோணி, ஜோசப்.**

ஜோதிநாயக்கனுார் ஊராட்சியிலுள்ள 11 கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்தபோது, அனைவரும் ஆர்வமாக வாங்கிக் கொண்டார்கள். தாடையம்பட்டி கிராமத்தில் ஒரு பெரியவர் உங்கள் இயேசு எங்கள் கிராமத்திற்கு ரோடு போட்டுத் தருவாரா? என்றார். இயேசுவிடம் வாருங்கள், ரோடு போட்டுத் தருவார் என்று கூறினோம். வண்ணான்குளத்தில் ஒரு பெண்ணிடம் சுவிசேஷம் சொன்ன போது, அவள் உங்கள் இயேசு சாமியை கும்பிட்டால் எங்கள் சாமி எங்களை காரில் தள்ளிவிட்டு கொன்று விடும் என்றாள். மொத்தம் 1180 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோதரி விமலா, செலின், அந்தோணிமேரி, ரூத் கலாவாணி, ரெபேக்காலட்சுமி, சாந்தி.**

நாங்கள் சென்ற கிராமத்தில் ஒரு இந்து பூசாரிக்கு சுவிசேஷம் சொன்ன போது, அவர் நான் R.S.S.தலைவர், 1000 பேருக்கு பூசாரி, மந்திரவாதியாக இருக்கிறேன், எப்படி இயேசுவை ஏற்றுக் கொள்வது என்றார். அவருக்கு சத்திய வசனங்களை சொல்லி கடந்து வந்தோம். மொத்தம் 1020 சுவிசேஷப் புத்தகங்கள், 875 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8 சகோ.இஸ்ரவேல்.இஸ்தாக்கி, அந்தோணி, ஸ்டீபன்ராஜ்.**

கீரிப்பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங் களுக்கு சென்று சுவிசேஷத்தைக் கூறி இயேசுவை அறிவித்தோம். யாவரும் ஏற்றுக்கொண்டார்கள். மொத்தம் 1300 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோதரி டோரா லாசர், சீலா, அமிர்தம், லூயிஸ், ராணி சந்திரா.**

நாங்கள் சென்ற கிராமங்களில் இந்து மதத்தினர் யாவரும் சுவிசேஷத்தைக் கேட்டு, புத்தகங்களை பெற்றுக் கொண் டார்கள். நோயாளிகளுக்கு எண்ணெய் பூசி ஜெபித்தோம். கோடாங்கி ஒருவருக்கு **இயேசுவே மெய்யான கடவுள்** என்று சொன்னபோது, அவர் தன் நெற்றியில் பூசி யிருந்த குங்குமம், திருநீரை அழித்துவிட்டு இயேசுவை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோதரி பிச்சையம்மாள், எஸ்தர், தெபோராள், கிருபா.**

நாங்கள் சென்ற 11 கிராமங்களிலும் மக்கள் யாவரும் அன்பாகவும்,பக்தியுடனும் சுவிசேஷப் புத்தகங்களை வாங்கினார்கள். மொத்தம் 1040 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோ.பிரேம்ஆனந்த், பாபு, கிங் சாலமோன், டேவிட், எபினேசர்.**

நாங்கள் சென்ற கிராமத்தில் ஒருவர் உங்கள் இயேசு மட்டும் தான் நல்லது செய்வாரா? எங்கள் தெய்வம் நல்லது செய்யாதா? என்றார். **'இயேசு தான் நம் எல்லோருடைய பாவங்களுக்காக தன் ஜீவனையே கொடுத்தவர்'** என்று சொன்னபோது ஏற்றுக் கொண்டார். ஒரு படித்த வாலிபன் உங்கள் இயேசு வேலை தருவாரா? என்றதற்கு முதலாவது இயேசுவை தேடி வாருங்கள். நிச்சயம் வேலை தருவார் என்று கூறினோம். மொத்தம் 1335 சுவிசேஷப் புத்தகங்கள், 750 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு "100 - கிராம ஊழியம்"** திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## கன்னியாகுமரி - திருவட்டார் யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**__நோக்கம்:__ 2009 ஜுலை 20** திங்கள் காலை 9 மணி முதல் **ஜுலை 24** வெள்ளி இரவு 10 மணி முடிய **கன்னியாகுமரி – திருவட்டார் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 ஜுலை 20** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 ஜுலை 24** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 ஜுலை 20 - 24 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**__உபவாச ஜெபம் நடைபெறும் இடம்__**

**இந்தியா பிலதெல்பியா சர்ச்,**
**விராலி காட்டு விளை,**
**மேக்கா மண்டபம் - போஸ்ட்,**
**அழகிய மண்டபம் - வழி, கன்னியாகுமரி மாவட்டம்.**
**போன் : 04651 - 257181, 04652 - 277251.**

**__நன்றி__** : உதவி செய்ய முன் வந்த Rev.Dr.S. **ஏசுதாசன்** அவர்களுக்கு நன்றி!

**__தகுதி__** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**__பிரயாணப்படி__ :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**__முக்கிய அறிவிப்பு__ :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**__சகல தொடர்புகளுக்கும்__ :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2009 மே மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மே மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். அநேக நாட்களாக ஜெபித்த ஜெபத்தின் பலனாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 2009ம் ஆண்டு 100–கிராம ஊழியம் செய்வதற்கான ஏற்பாடுகளை கர்த்தரே செய்து கொடுத்தார். இந்தியன் பிலதெல்பியா தேவ சபைகளின் தலைவர் Rev.Dr.S.ஏசுதாசன் அவர்கள் ஜுலை 20 முதல் அவர்களது தலைமை சபையை மையமாகக் கொண்டு இந்த ஊழியத்தை திருவட்டார் யூனியனில் செய்ய மனமுவந்து பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

மே 24ம் தேதி சென்னை ACA சபையில் TVGM ஸ்தாபகர் P.T.கிறிஸ்டோபர் அவர்கள் செய்தி கொடுத்த ஆராதனையில் நாங்களும் 2 சகோதரிகளாக கலந்துகொண்டு TVGM அறிமுகப்பணிகளை செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

மே மாத இறுதியில் **குறண்டி** என்ற கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்ய கர்த்தர் திறந்த வாசலை தந்தார்.

நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகம் இயங்கி வரும் வீட்டை 2009 நவம்பர் மாதத்தோடு காலி செய்ய வேண்டியுள்ளது. 6 மாதத்திற்குள் கர்த்தர் ஒரு நல்ல வீட்டைத் தருவார் என விசுவாசித்து ஜெபிக்கிறோம். சொந்தமாக ஒரு வீடு வாங்குவதிலும் எங்களது பொருளாதார நிலைமையை கர்த்தரே அறிந்திருக்கிறபடியால் அவரது சித்தம் நிறைவேற ஜெபித்து காத்திருக்கிறோம். இதை வாசிக்கிற தேவபிள்ளைகளும் இதற்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். **ஜெபமே ஜெயம்! தேவனுக்கே மகிமை!**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**

**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

### 2009 ஜுலை மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

**மாவட்டம் :** திருச்சி **யூனியன் :** மணிகண்டம்
**நாள் : 04.07.2009** **நேரம் :** காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் கலையரசன்**
**FMPB சர்ச்**
**பஞ்சப்பூர், மணிகண்டம் வழி,**
**எடமலைப்பட்டி புதுார் P.o.**
**திருச்சி – 12.**

# இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை ( 2009 மே )

கர்த்தருடைய கிருபையினால் விருதுநகர் மாவட்டம் – **திருச்சுழி** யூனியனில் 23.05.2009 அன்று புதிய இந்திய ஏ.ஜி.சபையில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது.

TVGM-உடன் கடிதத்தொடர்பு கொண்டுள்ள புறமத நண்பர்கள் அழைப்பு கடிதம் பெற்றுக்கொண்டவர்களில் 4 பேர் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டனர். இவர்களுக்கு **இயேசுகிறிஸ்துவே மெய்யான கடவுள்** என்பதை வேதாகமத்தின் அடிப்படையில் விளக்கமாக கூறியபோது, அவர்கள் சத்தியத்தைக் கேட்டு **இயேசுவுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்**. ஞாயிறு தோறும் சபை ஆராதனைக்கு வருவதாக கூறினார்கள்.

ஒவ்வொருவரும் தங்களுடைய பிரச்சனைகளுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள். ஏ.ஜி.சபையின் **போதகர் ஜீவானந்தம்** அவர்கள் ஜெபித்தார்கள். பின்பு மதிய உணவு கொடுத்து உபசரித்தார்கள். முகாமிற்கு வந்திருந்த 4 பேரும் சமாதானத்துடன் திரும்பி சென்றார்கள். **தேவனுக்கே மகிமை!**

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

**கர்த்தர் சகல நோய்களையும் உன்னைவிட்டு விலக்குவார். உபா.7:15**

### துதி ஆராதனை

**நாள் : 01.07.2009** புதன்கிழமை

**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM

**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

### நடு இரவு ஜெபம்

**நாள் : 31.07.2009**

**நேரம் :** 7PM-12Mid Night

**கர்த்தருடைய பந்தி : 12மணி**

### உபவாச ஜெபம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலை 9 முதல் மதியம் 12 மணி வரை உபவாச ஜெபம் நடைபெறும்.

### இடம்

**TVGM தலைமை அலுவலகம்**
**( வீரங்கி நல்லூர் ரோடு )**
**100 – கிராமம்,**
**சோமரசம் பேட்டை ( ஆஸ்பத்திரி ஸ்டாப் )**
**திருச்சி – 620 102.**
**போன்: 0 - 431 - 2607241 செல் : 94435 - 44628**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

## TVGM தலைமை அலுவலகத்திற்கு வந்த சாட்சி கடிதங்களில் சில

1. **சகோதரி கரோலின், சென்னை.**
நான் கடந்த 7 வருடங்களாக "100–கிராம ஊழியம்" மாதாந்திரப் பத்திரிக்கையை படித்து மகிழ்கிறேன். ஒவ்வொரு மாதமும் கர்த்தர் எனக்கு என்ன சொல்கிறார் என்பதை அறிய பத்திரிக்கை எப்பொழுது வரும் என்று நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்.

2. **சகோதரி எலிசபெத், சென்னை.**
"100–கிராம ஊழியம்" மாதாந்திரப் பத்திரிக்கை மிகவும் அருமையாகவும் பிரயோஜனமாகவும் இருக்கிறது.

3. **சகோ.அன்பழகன், வேலூர்.**
எனது அண்ணன் மகன் 10ம் வகுப்பு தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். நானும் "100–கிராம ஊழியம்" பத்திரிக்கையில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 428 மதிப்பெண்கள் எடுத்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற செய்தார்.

4. **சகோ.சேகர், திருவண்ணாமலை.**
எனக்கு கல்லூரி படிப்பிற்கு விடுதியில் இடம் கிடைக்க ஜெபிக்கும் படி கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். இப்பொழுது விடுதியில் இடம் கிடைத்து படித்து வருகிறேன்.

***100-கிராம ஊழியம்***
*பத்திரிக்கையை உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.*

5. **சகோதரி ரேணுகா, உத்தண்டியூர்.**
என் அக்கா மகன் கணையம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்தபோது, ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு பூரண சுகத்தைக் கொடுத்தார்.

6. **சகோதரி சங்கீதா, திருச்சி.**
தாங்கள் அனுப்பிய மே மாதம் **தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்** பத்திரிக்கையின் வாக்குத்தத்தம் **"கர்த்தர் நம்மை நினைத்திருக் கிறார்; அவர் ஆசீர்வதிப்பார்"** என்ற வசனத்தின் அடிப்படையில் எழுதப் பட்டிருந்த செய்தி எனக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

7. **சகோதரி வின்சிலா, முளன்குழி.**
என் மகளுக்கு கடந்த 21ம் தேதி நடு இரவு மிகுந்த காய்ச்சலாக இருந்தது. எந்த மருந்தும் கொடுக்க வில்லை. **தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்** மாதஇதழுக்கு சாட்சி எழுதுவேன் என்று ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகம் கொடுத்தார்.

**நன்றி:–** சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கிய சகோ. கார்த்திகேயன் மற்றும் சகோ. ஜெனா அவர்களுக்கு நன்றி. 10.06.2009 அன்று இரவு பாஸ்டர் ஜோசப் ஜெபமணி குழுவினர் ஜெபித்து வழங்கினார்கள்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** TVGM தலைமை அலுவலக காம்பவுண்டில் தங்கியிருந்து 12 மணி நேரம் தேவனுக்கு துதிஆராதனை செய்வதற்கு ஜெபதரிசனம் பெற்ற 12 பேரை கர்த்தர் தரும்படி ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** TVGM சிறுவர் இல்லத்தின் முன்பகுதியை கட்டுவதற்கு குறைவுபடும் ரூ.5 லட்சத்தை தேவன் தமக்குச் சித்தமானவர்கள் மூலம் அற்புதமாக சந்திக்கும்படி ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால், 2009 அக்டோபர் மாதம் உத்தேசமாக கிரவுண்ட் ப்ளோர் 4ல் ஒரு பகுதி முடிவடைந்து பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

***புதன்:*** திருச்சி அருகில் TVGM Leadership Training Centre ல் வேதாகமப் பயிற்சி, சீஷத்துவப் பயிற்சி மற்றும் சமூகப் பணி நடைபெற 5 ஏக்கர் நிலம் வாங்கப்பட ரூ.15 லட்சம் கர்த்தர் கிருபையாக கட்டளையிடவும், தரிசனம் பெற்றவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும் ஜெபியுங்கள்.

***வியாழன்:*** நாகர்கோவில் TVGM அறிமுகப் பணி அலுவலகம் அமைக்க ஒரு சொந்த கட்டடம் வடசேரி பஸ் ஸ்டாண்டிற்கும், குளத்து பஸ் ஸ்டாண்டிற்கும் இடையில் கர்த்தருக்கு சித்தமான நேரம் கர்த்தருடைய பிள்ளைகள் கண்களில் தயவு கிடைத்து அற்புதமாக ஒரு சொந்த கட்டடம் கிடைக்க ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** 2009 ம் ஆண்டு ஜுன் 17 முடிய இதுவரையிலும் 7 ஜெபவீடுகள் திருச்சியைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியர்களுக்கு கட்டிக் கொடுக்க நம்மால் இயன்ற உதவியை செய்ய கர்த்தர் கிருபை கொடுத்தார். ஆனாலும் இன்னும் பல மாவட்டங்களில் கிராம ஊழியர்கள் நிலங்கள் வைத்துக் கொண்டு கட்டுவதற்கு பணமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை நேரடியாக போய் விசாரித்து தகுதியானவர்களுக்கு ஜெபவீடு கட்டிக் கொடுப்பதற்கு கர்த்தர் பொருளாதார வாசலை திறந்து தரும்படி ஜெபியுங்கள்.

***சனி:*** TVGM தலைமை அலுவலகத்தில் தங்கியிருந்து அம்பாசிட்டர் கார் ஓட்டுவதற்கு லைசன்ஸ் உள்ள, முன் அனுபவமுள்ள, ஊழிய வாஞ்சையுள்ள டிரைவரும், கம்பியூட்டரில் தமிழ், ஆங்கிலம் டைப் பண்ணவும், கணக்குகள் வைக்கவும், போட்டோ ஷாப் அனுபவமுள்ளவர்களும் கர்த்தர் கிருபையாய் கொடுக்க ஜெபியுங்கள்.

***ஞாயிறு:*** TVGM க்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற முழுநேர, பகுதி நேர ஊழியர்களுக்காகவும், குறிப்பாக 100–கிராம ஊழிய தன்னார்வத்தொண்டர்களுக்காகவும், குண்டல் சிறுவர் இல்லத்திற்காகவும், இலங்கை, ஒரிஸா, குஜராத் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

## Yishun Evangelical Church - Pastor Joseph Jabemany

தலைமையில் சிங்கப்பூரிலிருந்து 17 பேர் TVGM தலைமை அலுவலகம் – சோமரசம்பேட்டைக்கு வந்து, தங்கியிருந்து **6** ஜெபவீட்டை பிரதிஷ்டை செய்தார்கள். ( அட்டையின் உட்பக்கத்தில் 6 ஜெபவீட்டை பார்க்கலாம் )

**மேலும் பின்வரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.**




திருமதி ஷைலா ஜெபமணிக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது.



Pr. ஏசுதாஸ் ஞானம் – நிலக்கோட்டை புத்தக ஊழியத்திற்காக ஜெபித்தார்கள்.





TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டது.




சகோ.P.T.கிறிஸ்டோபர் / ஜெயசீலி மகன் ஸ்டீபன் கிறிஸ்டோபருடன் பாஸ்டர் ஜோசப் ஜெபமணி மிஷன் குழுவினர்



சிறுவர் இல்லப் பிள்ளைகளுடன் பாஸ்டர் ஜோசப் ஜெபமணி மிஷன் குழுவினர்



TVGM சிறுவர் இல்ல கட்டடப் பணியை பார்வையிட்டு ஜெபித்தார்கள்.



தொட்டியம் பாஸ்டர் நோவா நிலத்தில் ஜெபவீடு கட்டப்பட ஜெபித்தார்கள்.




13.06.09 அன்று டி.வி.ஜி.எம் தலைமை அலுவலக ஜெபத்தில் சகோதரி மாலா சாம் தேவசெய்தியளித்தார்கள்.



சகோ.வெங்கடேஷ் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கினார்





12.06.2009 அன்று இனாம்குளத்தூர் TVGM Leadership Training Centre நிலத்தை பாஸ்டர் ஜோசப் ஜெபமணி சபை மிஷன் குழுவினர் பார்வையிட்டு ஜெபித்தார்கள்.

**வெப்சைட் : tvgm.org**

2009 **ஜூன்** 8 - 12 **நடைபெற்ற அனைத்து ஜெபவீடு பிரதிஷ்டை மற்றும் நிகழ்ச்சியின் போட்டோக்களை ஜூலை மாதம் முதல் வாரம்** TVGM **வெப்சைட்டில் கண்டு களித்து தேவனை துதியுங்கள்.**

24.05.2009 அன்று சென்னை புரசைவாக்கம் அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் பாஸ்டர் சாம் சுந்தரம் முன்னிலையில் சகோ.பி.டி.கிறிஸ்டோபர் (TVGM ஸ்தாபகர் ) தேவசெய்தியளித்தார்கள். ஆராதனை முடிவில் 16,000 சிலுவைக்கொடிகள் விசுவாசிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.









**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை**

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)
ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**
**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
**Posting Date 25th at H.P.O. Trichy.**



*Yishun Evangelical Church* மூலமாக பாஸ்டர் **ஜோசப் ஜெபமணி** 10.06.09 அன்று உணவளித்தார்கள்.

சகோ. ராஜா பிறந்தநாளை முன்னிட்டு TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளிக்கப்பட்டது. ( 06.06.2009 )





**TVGM தலைமை அலுவலக முகவரி**
**ஜெப உதவி,காணிக்கை மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**
**MR.STEPHEN CHRISTOPHER,**
**DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**100- VILLAGE ( Veeranginallur Road )**
**SOMARASAMPETTAI,(Hospital Stop)**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

STD Ph : **0-431 - 2607241**
CELL : **9487192763**
**Email :**
**100village@tvgm.org**

***Website :***
**www.tvgm.org**

தினசரி வாக்குத்தத்தம், செய்தி 100 கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER **R.N.I. Number : TNMUL / 2000 / 4011**
**HUNDRED VILLAGE MINISTRY** ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി_ हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री